# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

## IA. No. 154/2018 in HMOP. No. 11/2015

Deposition of PW2 solemnly affirmed under Provision Oaths Act 1969(Act 44 of 1969), the 1st day of August 2022.

| | | | |
|---|---|---|---|
| Name: | தங்கவேல் | Religion | |
| Husband's Name: | பெருமாள் | Caste | |
| Village: | தேவுர் கிராமம் | Calling | உதவியாளர் (பணி ஓய்வு ) |
| Taluk: | சங்ககிரி | Age | 65 |

**முதல் விசாரணை ( சத்தியபிரமாணத்தின் பேரில்)**

நான் இந்த மனுவில் 3ம் தரப்பினர் மற்றும் ம.சா.2 ஆவேன். எனது தரப்பு முதன்மை சாட்சிக்காக பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் அதிலுள்ள சங்கதிகள் நான் கூறியவை தான். அதில் நான் படித்து பார்த்து தான் கையொப்பமிட்டுள்ளேன். அதை எனது தரப்பு முதன்மை சாட்சியாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மனுதாரர் தரப்பு சான்றாவணமாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருமணச் சீர்வரிசைக்காக வாங்கிய பொருட்களின் ரசீது - 4ன் அசல் ம.சா.ஆ.1 ஆக மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றது. மனுதாரர் ஆகிய எனது மகளுக்கும், எதிர்மனுதாரருக்கும் 02.09.2011ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனது மகளும், எதிர்மனுதாரரும் எவ்வளவு காலம் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் 2013ம் வருடம் வரை சேர்ந்து வாழ்ந்தார்கள். அதற்கு பின்னிட்டு 2 பேரும் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் இல்லை. 2013ஆண்டுக்குப் பின்னிட்டு பல நீதிமன்றங்களில், காவல் நிலையங்களில் எனது மகளால் புகார் கொடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். நானும், எதிர்மனுதாரர் என் வீட்டிற்கு வந்து பிரச்சினை செய்து கலாட்டா செய்ததாகவும், அவமரியாதையாக பேசியதாகவும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கும், நீதிமன்றத்திற்கும் நானும் உடன் சென்றுள்ளேன் என்றால் சரிதான். சங்ககிரி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் DVC No.3/2014 என்ற வழக்கை என் மகள் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கை எதற்காக என் மகள் தாக்கல் செய்தார், அதில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதில் என்னென்ன ஆவணங்கள் எனது மகள் தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் என் மகள் சேலம் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த ம எதற்காக எனது மகள் தாக்கல் செய்துள்ளார் என்றால், என்னுடைய மகளுடைய பொருட்கள் சீர்வரிசை பொருட்கள் , வீட்டு உபயோக பொருட்கள் எதிர்மனுதாரர் திரும்ப ஒப்படைக்க கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார். அசல் மனு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால், விவாகரத்து கோருவதற்காக தாக்கல் செய்துள்ளார். அசல் மனுவில் எனது மகள் என்ன எதிருரை தாக்கல் செய்துள்ளார் எனற் வவிரம் எனக்கு தெரியாது. என்னுடைய மகள் இந்த மனுவை தாக்கல்

செய்தபோது தற்போது தாக்கல் செய்துள்ள ரசீதுகளை அவரிடம் கொடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ம.சாஆ.1 1 ரசீதுகளில் மேற்படி பொருட்கள் எனக்குதான் விற்பனை செய்யப்பட்டன என்பதற்கான எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் கொடுத்த தொகை மற்றும் நான் வாங்கிய பொருட்களின் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சாந்தாமணி மெட்டல் கடையின் உரிமையாளரை நான் விசாணை செய்ய தயாராக உள்ளேனா என்றால், அவரிடம் நான் மேற்படி பொருட்களை வாங்கினேன் என்பதற்காக ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அதே போல் தான் ம.சா. ஆ.1 ஆவணங்களும், நீதின்றத்தில் தாக்கல் செய்ய தேவைப்படுவதாக கூறி தற்போது வாங்கி வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அவைகள் பொருட்களை வாங்கும்போதே கொடுத்த ரசீதுகளாகும். இந்த ரசீதுகள் உள்ள விவரம் என்னுடைய மகளுக்கு தெரியுமா எனறால் என் வசம் இருந்ததால், இந்த வாரம் தான் தெரியம். இந்த மனுவில் என்னுடைய மகளை விசாரணை செய்த பின்னிட்டு மேற்படி வழக்குக்காக இந்த ஆவணங்களை நான் தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கிரைண்டர் வாங்கியதாக கூறப்படும் கேரண்டி கார்டில் உள்ள துண்டுசீட்டு 03.09.2011 தங்கவேலு, மயிலம்பட்டி, ரூ.3200/- என்ன பொருள் வாங்கியதற்கு கொடுக்கப்பட்டதாக இல்லை என்றால் சரிதான். அது கிரைண்டர் வாங்கும்போதுதான் கொடுக்கப்பட்டது. நகைகள், எந்த கடையில், எவ்வளவு தொகைக்கு வாங்கினேன் என்பதற்கான ரசீதுகள் உள்ளனவா என்றரல் இல்லை. பீரோ, கட்டில் ஆகியவை வாங்கியதற்கான ரசீதுகள் உள்ளதா என்றால் இல்லை. மரம் எடுத்து ஆசாரிகள் செய்ததால் ரசீதுகள் இல்லை. 2 பெரிய கொப்பரைக்கான ரசீது இல்லை என்றால் சரிதான். அது திருமணத்தின்போது மொய்யாக கொடுத்ததால் அதற்கு ரசீது இல்லை. நான் தாக்கல் செய்த ம.சா.1 ரசீதுகள் அனைத்தும் நான் எனது மகளுக்கு கொடுத்த அனைத்து சீர்வரிசை பொருட்களுக்கான ரசீதுகள் இல்லை என்றால், சரிதான். திருமணத்தின் போது உறவினர்கள் கொடுத்த பொருட்களோடு, இல்லாத பொருட்களைதான் அந்த ரசீதில் உள்ள பொருட்களோடு வாங்கி சீர்வரிசையாக கொடுத்துள்ளேன். என்னுடைய வாக்குமூலத்தில் நான் சீர்வரிசை பொருட்களாக என்னுடைய உறவினர்கள் கொடுத்த பொருட்களையும் சேர்த்து கொடுத்ததாக கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய மகளின் சீர்வரிசை பொருட்கள், ஆவணங்கள் ஆகியவை அனைத்தும் எதிர்மனுதாரர் வசம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என் மருமகன் அவர் இஷ்டப்படி ஸ்ரீகீதா என்ற பெண் உடன் குடும்பம் நடத்தி வருகிறார் என்று கூறியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. அந்த பெண் உடன்தான் குடும்பம் நடத்தி வருகிறார். எனது மகள் தாக்கல் செய்த மனு நிலைக்கத்தக்கதல்ல எனவும், நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

Sd/- தங்கவேல்

Sd/- Tmt.S. Uma Maheswari,
Sub Judge, Sankari.